**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**2024−ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஐ.ஏ.எண்.2/2024**
**இன்**
**அ.வ.எண்.34/2015**

1. K.பாலசுப்பிரமணியன்
2. சண்முகம்
3. G. சரஸ்வரி ......மனுதாரர்கள்/உத்தேச கட்சிக்காரர்கள்

/எதிர்/

1. S.குமார் .....எதிர்மனுதாரர்/வாதி
2. செயல் அலுவலர்,
   பேரூராட்சி அலுவலகம்,
   மண்டபம்.
3. R. ராஜேஸ்வரன்(ஒப்பந்தக்காரர்) ......எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 12.08.2024−ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.ரவிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.S.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர்/2ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சரவணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது கட்டளை 1 விதி 10(2)ன் படி அசல் வழக்கில் உத்தேசகட்சிக்காரரான இம்மனுதாரர்களையும் தரப்பினராக சேர்த்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1) மனுவின் சுருக்கம் :–</u>

தாவா சொத்துக்கள் சம்பந்தமாக 1ம்எதிர்மனுதாரர்/வாதியானவர் 2, 3 எதிர்மனுதார்கள்/1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா 2வது இலக்க சொத்து சம்பந்தமாக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அதேபோல் தாவா 2வது இலக்க சொத்து சம்பந்தமாக இந்த 1ம் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் 10 பேர்கள் சேர்ந்து விளம்புகை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மு.வ.எண்.42/2015 இந்தநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருவதாகவும், மேலும் தாவா 2வது இலக்க சொத்து சம்பந்தமாக சாந்தி (எ) பர்வதவர்த்தினி, 1ம்எதிர்மனுதாரர்/வாதி ஆகியோர் வாதிகளாக இருந்து, மனுதாரர்கள்/உத்தேச கட்சிக்காரர்கள் மற்றும் 10 நபர்கள் பெயரில் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி நீதிமன்றத்தில் மு.வ.எண்:2/2022 தாக்கல் செய்யப்பட்டு, அதில் இ.ம.எண்:1/2022 மனுவில் இந்த மனுதாரர்கள்/உத்தேச கட்சிக்காரர்கள் தரப்பில் விரிவான எதிருரை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், அதன்பேரில் 1ம் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் சாந்தி என்ற பர்வதவர்த்தினி இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு சி.எம்.ஏ.எண்:1/2023 நிலுவையில் இருந்து வருவதாகவும்,

தாவா 2வது இலக்க சொத்து சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்த தாவா வழக்கும், சாந்தி என்ற பர்வதவர்த்தினி மற்றும் இந்த 1ம் எதிர்மனுதாரர்/வாதி ஆகியோர் வாதிகளாக இருந்து தாக்கல் செய்த O.S.No:2/2022 வழக்கும், மற்றும் பர்வதவர்த்தினி, இந்த 1ம் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் 8 பேர்கள் வாதிகளாக இருந்து தாக்கல் செய்துள்ள O.S.No:42/2015 ஆகிய வழக்குகளில் கட்டுப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் ஒரே சொத்து எனவும்,

தாவா 2வது இலக்க சொத்துக்கள் சம்மந்தமாக சாந்தி என்ற பர்வதவர்த்தினி மற்றும் 1ம்எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் இந்த மனுதாரர்கள்/உத்தேச கட்சிக்காரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு, அந்த வழக்கில் தாவாசொத்து விபரத்தை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி இ.ம.எண்.1/2023 மனு 01.07.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்,

1ம் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் பர்வதவர்த்தினி, இந்த மனுதாரர்கள்/ உத்தேசகட்சிக்காரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் எதிர்வாதம் செய்து வருவதாலும், மேற்படி வழக்கு சொத்தும், இவ்வழக்கு சொத்தும் ஒரே சொத்தாக இருந்து வருவதால் மனுதாரர்கள்/உத்தேச கட்சிக்காரர்கள் அசல் வழக்கில் அவசிய கட்சிக்காரர்கள் ஆவார்கள். எனவே மனுதாரர்கள்/உத்தேச கட்சிக்காரர்களை அசல் வழக்கல் தரப்பினராக சேர்த்து வழக்கினை மேல்நடத்திட உத்திரவிடுமாறு தாக்கல் செய்யப்படுகிறது.

2. <u>எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும், நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

அசல் வழக்கின் 2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள், மனுதாரர்கள்/ உத்தேச கட்சிக்காரர்களுடன் கூட்டுச் சேர்ந்து அசல் வழக்கினை இடையூறு ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும்,

இந்த 1ம்எதிர்மனுதாரர்/வாதி மற்றும் அவரது சகோதரி சாந்தி என்ற பர்வதவர்த்தினி ஆகியோர் வாதிகளாக இருந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள O.S.No.2/2022 வழக்கில் மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள் தரப்பினர்களாக இருப்பதால், அந்த வழக்கிலேயே அவர்களது உரிமைகள் மற்றும் கோரிக்கைகளை வலியுறுத்தமுடியும்.

மேலும் இந்த அசல் வழக்கு மற்றும் O.S.No.2/2022 வழக்கின் வழக்குமூலங்கள் முழுவதும் வெவ்வேறாகும். மனுதாரர்கள்/உத்தேசகட்சிகாரர்கள் மேற்படி அ.வ.எண்.2/2022 வழக்கு மற்றும் அ.வ.எண்.42/2015 வழக்கு மற்றும் இந்த வழக்கையும் இணைந்து விசாரணை(trial) செய்வதற்கு மெமோ தாக்கல் செய்து நடத்தலாம் எனவும், எனவே, மனுதாரர்கள்/உத்தேசகட்சிகாரர்கள் இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கினை காலங்கடத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் CPC கட்டளை 1 விதி 10 (2) கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும்,

மேலும் இந்த அசல் வழக்கில் மனுதாரர்கள்/உத்தேசகட்சிகாரர்களுக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை, மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள் அசல் வழக்குக்கு தேவையான தரப்பினராக உரிமை கோருவதற்கு சட்டப்பூர்வமான உரிமைகள் இல்லை. அதனால் மனுதாரர்கள்/உத்தேசகட்சிகாரர்கள் வழக்குக்கு தேவையற்ற தரப்பினர் ஆவார்கள். எனவே செலவுதொகையுடன் மனுவை தள்ளுபடி செய்யும்படி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) <u>பிரச்சினை</u> :–

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

<u>பிரச்சினைக்கு தீர்வு</u> :–

5) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

6) அசல் வழக்கானது தாவா 2 வது இலக்க சொத்தில் 2, 3 எதிர்மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகள் சாலை அமைத்திருப்பதை நீக்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கில் உள்ள தாவா 2 வது இலக்க சொத்து சம்பந்தமாக 1ம்எதிர்மனுதாரர்/வாதி அ.வ.எண்.42/2015 என்ற வழக்கினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருவதாகவும், அதேபோல் தாவா 2 வது இலக்க சொத்து சம்பந்தமாக சாந்தி என்ற பர்வதவர்த்தினி மற்றும் இந்த வழக்கின் 1 எதிர்மனுதாரர்/வாதி ஆகியோர் வாதிகளாக இருந்து இந்த மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள் மற்றும் 10 நபர்கள் மீது உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மு.வ.எண்.2/2022 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருவதாகவும், இந்த அசல் வழக்கிலும், மேற்படி முன் வழக்கான 42/2015 வழக்கிலும், அதேபோல் அ.வ.எண்.2/2022 வழக்கிலும் உள்ள சொத்துக்களானது அனைத்தும் ஒரே சொத்து எனவும், அதனால் அசல் வழக்கிற்கு மனுதாரர்கள்/உத்தேசகட்சிகாரர்கள் அவசிய தரப்பினர்கள் என சொல்லப்பட்டுள்ளது.

7) அதேவேளையில் 1ம்எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எதிருரையில், மனுதாரர்கள்/3 முதல் 5 உத்தேசமனுதாரர்கள் இந்த வழக்கில் அவசிய தரப்பினரோ, தேவையான தரப்பினரோ கிடையாது. மேலும் மனுதாரர்கள்/உத்தேசகட்சிகாரர்களுக்கு எதிராக அ.வ.எண்.2/2022 தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளதால், அந்த வழக்கில் உள்ள வழக்குமூலம் வேறு. இந்த வழக்கிற்கு வழக்குமூலம் வேறு எனவும், மேலும் அந்த வழக்கில் மனுதாரர்கள்/உத்தேசகட்சிகாரர்களுக்கு எதிராக எந்தவொரு பரிகாரமும் கோரப்படவில்லை. மேலும் மனுதாரர்கள்/ உத்தேசகட்சிகாரர்கள் மேற்படி அ.வ.எண்.2/2022 வழக்கு மற்றும் அ.வ.எண்.42/2015 வழக்கு மற்றும் இந்த வழக்கையும் இணைந்து விசாரணை(trial) செய்வதற்கு மெமோ தாக்கல் செய்யலாம். மாறாக அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கக்கோரி தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என ஆட்சேபிக்கப்பட்டது.

8) மேற்படி இருதரப்பிலும் எதிரெதிராக சொல்லப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், இந்த அசல் வழக்கான 34/2015 வழக்கில் தாவா 2வது இலக்க சொத்தில் 2, 3எதிர்மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகள் சாலை அமைத்திருப்பதை நீக்கக்கோரி செயல்உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் இந்த மனுதாரர்கள்/உத்தேச கட்சிக்காரர்கள் தங்களை இந்த அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கக்கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். அதற்கு மனு அபிடவிட்டில் சொல்லப்பட்ட காரணமானது, அசல் வழக்கில் உள்ள தாவா 2வது இலக்க சொத்து சம்பந்தமாக 1ம்எதிர்மனுதாரர்/வாதி அ.வ.எண்.42/2015 என்ற வழக்கினை இந்தநீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருவதாகவும், அதேபோல் தாவா 2வது இலக்க சொத்து சம்பந்தமாக சாந்தி என்ற பர்வதவர்த்தினி மற்றும் இந்த வழக்கின் 1எதிர்மனுதாரர்/வாதி ஆகியோர் வாதிகளாக இருந்து இந்த மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள் மற்றும் 10 நபர்கள் மீது உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மு.வ.எண்.2/2022 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருவதாகவும், இந்த அசல் வழக்கிலும், மேற்படி முன் வழக்கான 42/2015 வழக்கிலும், அதேபோல் அ.வ.எண்.2/2022 வழக்கிலும் உள்ள

சொத்துக்களானது அனைத்தும் ஒரே சொத்து என்பதால் தங்களை தரப்பினர்களாக சேர்க்க கோரப்பட்டுள்ளது.

அசல் வழக்கில் நபர்களை தரப்பினராக சேர்க்கப்பட வேண்டுமெனில், தேவையான தரப்பினரோ, அவசிய தரப்பினராகவோ இருக்கவேண்டும். இந்த வழக்கில் தாவா சொத்தான மண்டபம் சர்வே எண்.240/2 ல் உள்ளது. அந்த சொத்தில் இந்த மனுவின் மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்களுக்கு உரிமை உள்ளது எனவோ, அதனால் தங்களை தரப்பினர்களாக சேர்க்காமல் இந்த அசல் வழக்கினை தீர்வு செய்தால் மனுதார்கள்/உத்தேசகட்சிக்காரர்களுக்கு உரிமைக்கு பாதகம் ஏற்படும் என்பதற்கு எந்தவித ஆவணங்களோ, வாய்மொழி சாட்சியங்களோ மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள் தரப்பில் முன்னிறுத்தவில்லை. அதனால் இந்த மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள் தாவா சொத்தான சர்வேஎண்.240/2 ல் உள்ள சொத்திற்கு அவசிய தரப்பினர்கள் இல்லை.

அதேபோல் இந்த மனுவின் மனுதாரர்கள்/உத்தேச கட்சிக்காரர்கள் அசல் வழக்கில் தரப்பினர்களாக இல்லாமல், இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய தாவா சொத்தான சர்வேஎண்.240/2 ல் உள்ள சொத்தினை நீதிமன்றம் தீர்மானம் செய்யமுடியாதநிலையில் இருப்பதாகவும், மனு அபிடவிட் சங்கதிகளில் குறிபிட்டு எதுவும் சொல்லப்படவில்லை. அதனால் மனுதாரர்கள்/உத்தேச கட்சிக்காரர்கள் இந்த வழக்கின் தாவா சொத்திற்கு தேவையான தரப்பினர்கள் இல்லை.

9) மேலும் இந்த அசல் வழக்கில் உள்ள 2 வது இலக்க சொத்தும், 1 ம்எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மற்ற வழக்கான அ.வ.எண்.42/2015 வழக்கிலும், அதேபோல் 1 ம்எதிர்மனுதார்/வாதி மற்றும் அவரது சகோதரி இந்த மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள் மற்றும் 10 நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.2/2022 வழக்கிலும் உள்ள சொத்துக்களானது ஒரே சொத்து என்பதால் மட்டுமே, மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்களை அசல் வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்கு போதுமான காரணம் ஆகாது. மேலும் 1 ம்எதிர்மனுதார்/வாதி மற்றும் அவரது சகோதரி ஆகியோர் இந்த மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள் மற்றும் 10 நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.2/2022 வழக்கானது உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் அந்த

வழக்கில் சொத்தின் உரிமை குறித்து தீர்மானம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. அதனால் சொத்தின் உரிமை குறித்து தீர்மானம் செய்யவேண்டிய இந்த அ.வ.எண்.34/2015 வழக்கிற்கு மனுதாரர்கள்/ உத்தேச கட்சிக்காரர்கள் அவசிய தரப்பினர்கள் இல்லை.

மேலும் இந்த அ.வ.எண்.34/2015 வழக்கானது 08.07.2015ம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேவேளையில் மனுதார்கள்/ உத்தேச கட்சிக்காரர்களுக்கும், 1ம்எதிர்மனுதாரர்/வாதிக்கும் இடையே அ.வ.எண்.2/2022 வழக்கானது 2022ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் அந்த வழக்கில் உள்ள வழக்குமூலமும், இந்த வழக்கில் உள்ள வழக்குமூலமும் வேறு வேறு ஆகும். அந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரமும், இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரமும் வெவ்வேறாகும். அதனால் இந்த வழக்கிற்கு மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள் அவசிய தரப்பினர்கள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**முடிவாக**

**இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.09.03 19:47:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :–** **இல்லை**

**<u>மனுதாரர் தரப்பு சாண்றாவணம்</u> :–** **இல்லை**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி,சாண்றாவணம்</u> :–** **இல்லை**

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2024.09.03 19:47:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இராமேஸ்வரம்.
ஐ.ஏ.எண். 1/2024
இன்
அ.வ.எண்.34/2015
நேரிய/வரைவு உத்தரவு
நாள்:03.09.2024